


கோவிலின் பூட்டு உடைக்கப்பட்டிருப்பதை படத்தில் காணலாம்.



திருடர்களிடம் இருந்து தப்பிய சாமி சிலைகளை படத்தில் காணலாம்.

### செம்பனார்கோவில் அருகே

# நான்மதிய பெருமாள் கோவிலில் ஐம்பொன் சிலைகள் திருட்டு

## மர்ம நபர்களுக்கு போலீஸ் வலைவீச்சு

செம்பனார்கோவில்,ஜன.24-

செம்பனார்கோவில் அருகே தலச்சங்காடு கிராமத்தில் நான்மதிய பெருமாள் கோவிலில் ஐம்பொன் சிலைகளை திருடி சென்ற மர்ம நபர்களை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

### 13-வது திவ்ய தேசம்

நாகை மாவட்டம் செம்பனார்கோவில் அருகே தலச்சங்காடு கிராமத்தில் உள்ளது நான்மதிய பெருமாள் கோவில். இந்த கோவில் இந்தியாவில் உள்ள 108 வைணவ திவ்ய தேசங்களில் 13-வது கோவிலாக விளங்குகிறது.

திருமங்கையாழ்வார், குலசேகர ஆழ்வார் உள்ளிட்டவர்களால் பாடல் பெற்ற இந்த தலம் நாகை-சென்னை தேசிய நெடுஞ் சாலையில் உள்ளது. இந்த கோவிலுக்கு டெல்லி,மும்பை, கொல்கத்தா மற்றும் பல மாநிலங்களில் இருந்தும், வெளிமாவட்டங்களில் இருந்தும் இந்த பெருமாளை தரிசனம் செய்ய வருவது குறிப்பிடத்தக்கது. பல

செய்து வந்தார்.

### பூட்டை உடைத்து திருட்டு

இந்த நிலையில் கோவிலில் வழக்கம் போல் பூஜைகளை முடித்துகொண்டு நேற்று முன் தினம்(வியாழக்கிழமை)இரவு கோவில் கதவுகளை வரதராஜ பட்டாச்சாரியார் பூட்டிவிட்டு சென்றார். பின்னர் வழக்கம் போல் நேற்று கோவில் பரம்பரை அறங்காவலர் திருவேங்கடன் கோவிலை திறக்க வந்தார். அப்போது முன்புற கதவின் பூட்டு உடைக்கப்பட்டிருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். பின்னர் கோவிலின் உள்ளே சென்று பார்த்த போது கோவிலில் இருந்த நான்மதிய பெருமாள்,ஸ்ரீதேவி நாச்சியார், பூமாதேவி நாச்சியார், செங்கமலதாயார்,ஆண்டாள், செல்வர் ஆகிய ஐம்பொன் உற்சவர் சிலைகளை யாரோ மர்மநபர்கள் திருடி சென்றிருப்பது தெரியவந்தது. பின்னர் இது குறித்து திருவேங்கடன்செம்பனார் கோவில் போலீஸ்நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். தகவல் அறிந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் நடராஜன் தலைமையிலான போலீசார்

கப்பட்டது. மேலும் இது தொடர்பாகசெம்பனார் கோவில் போலீசார்வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### பொதுமக்கள் கோரிக்கை

இந்த பெருமாள் கோவில் தனியாரின் வசம் உள்ளதால் பராமரிப்பு பணிகள் சரிவர நடைபெறுவதில்லை என்றும், இந்த கோவிலை இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும் என்று அந்த பகுதி மக்கள் கோரிக்கை